# நகர தூதன்

**சந்தாவிவரம்.**

| | | |
|---|---|---|
| வருஷம் | ரூ. | 6—0—0 |
| 6-மாதம் | ரூ. | 3—4—0 |
| தனி பிரதி | ரூ. | 0—1—6 |

சர்க்கார் லோகல், போர்டுகளுக்கு சந்தா ரூ. 15—0—0

போர் 13 | திருச்சி 26—8—45 பார்த்திப-ஸு ஆவணி-மீ ம்-வ | வெற்றி 22


## பேனா நர்த்தனம்

—"கேசரி"—

சிம்லா மகாநாடு முறிந்து போச்சல்லவா? அதன் காரணந்தான் சோற்றுப் பட்டாளமா? உங்களுக்குத் தெரியுமே. முஸ்லிம் லீகின் தலைவரான ஜின்னாவின் பிடிவாதத்துக்கு இணங்கக் காட்டியாவது, தற்காலிக வைசிராய் நிர்வாக சபை ஏற்படுவதற்கு காங்கிரஸ் கட்சி துணிந்திருக்க வேண்டுமென்று அநேக பிரமுகர்கள் (காங்கிரஸ்) அப்போது அபிப்பிராயம் கூறியதும் உங்களுக்கு ஞாபகம் இருக்கும். "கோட்டைக்குள்ளேயே குத்து வெட்டா? காங்கிரஸ் கட்சியாரே இப்படிச் சொல்வதா? லீகுக்கே முஸ்லிம் ஸ்தானங்கள் ஐந்தையும் விட்டுக் கொடுத்திருந்தால், காங்கிரஸ் என்பது ஹிந்துக்கள் ஸ்தாபனம் என்று ஜின்னா சொல்லி வருவதை ஒப்புக்கொண்டது போலல்லவா முடியும்?" என்பதாக இடையிலுள்ள 'தேச பக்தர்கள்' எவ்வளவோ பேசினார்கள். அப்படிப் பேசினவர்களுக்கெல்லாம் இப்போது தான் உதித்திருக்கும் 'லீகுக்கு விட்டுக்கொடுத்தாவது நிர்வாக சபையை ஏற்படுத்தியிருக்கலாமே' என்று.

ஃ ஃ ஃ

சிம்லா பேச்சு நடைபெற்ற சமயம் ஜப்பான் சரணடையவில்லை என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கும். அந்த மகாநாடு வெற்றிகரமாக முடிந்திருக்குமானால் வைஸ்ராய் நிர்வாக சபை தற்காலிகமாக, அதாவது ஜப்பான் சண்டை முடிந்து பொதுத்தேர்தல் நடக்கும் வரை நடந்திருக்கும். அன்றைய நிலையில் ஜப்பான் இவ்வளவு சீக்கிரத்தில் ஆயுதங்களைக் கீழே போட்டுவிடும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். என்றாலும் வெகுநாளைக்கு ஜப்பானிய யுத்தம் நடக்கும் என்ற நம்பிக்கையும் யாருக்கும் கிடையாது. எப்படியும், ஆறு மாதங்கள் வரையோ, பன்னிரண்டு மாதங்கள் முடியுமட்டுமோ ஆசியா யுத்தம் நடக்கவே செய்யும்; அதுவரையாவது வைஸ்ராய் நிர்வாக சபையும் ஏற்பட்டு, அதன் மூலம் மாகாணங்களிலும் ஏதாவது ஒரு வகையில் மந்திரிசபைகள் உண்டாகாவிட்டால், அந்த யுத்தம் முடிந்த பின் ஏற்படும் பொதுத் தேர்தலில் காங்கிரசுக்குப் பலங்கிடைக்கும்படியான பக்குவத்தைத் தேடிக்கொள்ளலாம் என்பது தான் காங்கிரஸ்காரர்களின் எண்ணமாகயிருந்தது, ஆனால் யாரிட்ட சாபமோ, அல்லது எவர் செய்த நல்வினையோ சிம்லா மகாநாடு 'திடுதிம்' என்று முறிந்து போயிற்று.

ஃ ஃ ஃ

சிம்லா மகா நாட்டுக்கு அந்த கதி ஏற்படாமல், ஏதோ ஒரு வகையில் மத்திய நிர்வாக சபையும் மாகாணங்களில் மந்திரி சர்க்காரும் ஏற்பட்டிருக்குமானால், இப்போது என்ன ஆகியிருக்கும் தெரியுமா? யுத்தம் தொடங்கியதும் தேச நிர்வாகப் பொறுப்பைத் தட்டிக் கழித்து ஓடியவர்களும், 1942 ஆகஸ்டில் தபாலாபீஸ்களைக் கொளுத்தி, தாலூகா ஆபீஸ்களை தீயிட்டு, தந்திக் கம்பிகளை அறுத்து, தண்டவாளங்களைப் பெயர்த்து, ரயில் வண்டிகளைக் கவிழ்த்து நமது சகோதர மக்கள் வங் கொலையில் மடிவதற்கு முக்கிய காரணஸ்தர்களாயிருந்த காங்கிரஸ்காரர்கள், தாங்கள் செய்த அக்கிரமங்களை மறைத்து மூடவும் யுத்த முடிவின் நற்பயனை அடையவும் சல்லீசாக சவுகரியந் தேடிக்கொண்டிருந்திருப்பார்கள். மேலும் ஜப்பான் மீது ரஷ்யா போர் தொடங்கியதையும், அணு நாச குண்டு விழுந்ததையும் விட தேச நிர்வாகப் பொறுப்பை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டதால் தான் ஜப்பான் சரணடைந்தது என்றுகூட பீத்திக்கொண்டிருக்கவும் செய்வார்கள். காங்கிரஸ்காரர்களின் துரதிர்ஷ்டத்தால், சிம்லா மகாநாடு ஒரு சின்ன சங்கதியால் முறிந்து கலைந்தது.

* * *

சிம்லா மகா நாட்டின் கதி அப்படி ஆனபோது ஒன்றை ஒன்று முறைத்துப் பார்த்துக் கொண்டு வெளியேறிய லீகும் காங்கிரசும் நாட்டில் பொதுத் தேர்தல் நடக்கவேண்டும்என்று வற்புறுத்தின. இன்றைய லீகின் லக்ஷிய சம்பிரதாயமான பாக்கிஸ்தான் பிரச்னைக்கு முஸ்லிம்களின் ஆதரவை நிரூபிப்பதாக ஜின்னா முழக்கினார். ஜின்னாவின் கூற்றைப் பொய்யாக்கி, காங்கிரஸ் பக்கத்தில் முஸ்லிம்கள் அதிகமாயிருக்கிறார்கள் என்பதை ருஜுப்பிக்கிறேன் என்று 'ராஷ்டிரபதி' ஆஸாத் கர்ஜித்தார்; ஜவஹரும் முஷ்டி பிசைந்தார். யாரைப் பிடித்த சனியனோ தேர்தல் வந்தே விட்டது. டில்லி அசம்பிளிக்கு இந்த வருஷம் நவம்பரிலும் மாகாண அசம்பிளிகளுக்கு அடுத்த வருஷம் மத்தியிலும் தேர்தல் நடக்கப்போகும் சேதி இந்தியா மந்திரியின் வாயிலிருந்தே வந்து விட்டது. காங்கிரஸ் கட்சியின் 'உடான்வரிசை'யையும் லீக் கட்சியின் 'பாணவரிசை'யையும் பார்த்துவிட வேண்டும் என்பதற்காகத்தானோ என்னவோ, ரஷ்யாவின் போர்முரசும், அமெரிக்காவின் அணுநாசக்குண்டும் ஏககாலத்தில் ரெட்டைப் பிள்ளைகளாகப் பிறந்தன.

* * *

இப்படி நான் சொல்வதைக் கொண்டு, வரப்போகும் பொதுத்தேர்தல்களில் போட்டியிடும் லைசன்ஸ், லீகுக்கும் காங்கிரசுக்கும் மட்டுந்தான் கிடைத்திருக்கிறது என்று நான் சொல்வதாய் நினைத்துவிட வேண்டாம். இந்தியாவிலுள்ளஎல்லா அரசியல் கட்சிகளும் தேர்தல்களில் போட்டி போடத்தான் போகின்றன.

* * *

காங்கிரஸ் கட்சியின் சமீப கால சரித்திரத்தில், அது எத்தனையோ தவறுகள் செய்திருக்கின்றன. முக்கியமாய் மாபெரும் அக்கிரமங்கள் இரண்டிற்குப் பொது ஜனங்களின் விசாரணைக் கோர்ட்டில் காங்கிரஸ்காரர்கள் சமாதானஞ் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதாவது யுத்தம் தொடங்கியதும், சண்டைக்கு சகாயம் செய்யமுடியாது என்னும் பேரால், ஜனங்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளிலிருந்து நழுவி, மந்திரி பதவிகளை விட்டு விட்டு ஓடியது அல்லாமல், கூட்டுமந்திரிசபைகூட ஏற்படவிடாமல் தடுத்து ஜனங்களை ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்களிடம் காட்டிக்கொடுத்தது ஒரு அக்கிரமம். இரண்டாவது தான் மன்னிக்க முடியாதது; 1942—ஆகஸ்டு மாதம் பாமர மக்களைக் கலவரம் செய்யும்படி தூண்டிவிட்டது படுமோசமான அக்கிரமம். ஆகஸ்டு கலவரத்தால் நம் நாட்டு சகோதிர மக்களல்லவா படுகொலைக்கும் பண நஷ்டத்துக்கும் ஆளானார்கள்? தண்டவாளங்களைப் பெயர்த்ததால் கவிழ்ந்த ரயிலிலிருந்து விழுந்து மடிந்த மக்கள் அத்தனைபேரும் நம்முடைய உடன் பிறந்த மக்கள் அல்லவா? எங்கேயோ மூன்று நான்கு வெள்ளை சோல்ஜர்கள் கொலையுண்டதைத் தவிர அந்தக் கலவரத்தில் ஈடுபட்டும் உள்ளாகியும் மடிந்தவர் அனைவரும் நம்மவர் அல்லவா? சிமூர் அஷ்டி படுகொலை வழக்கிலும் குலசேகரம்பட்டணம் கலவர வழக்கிலும் சம்பந்தப்பட்டவர்களுக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக சர்க்காரால் மாற்றப்படாதிருக்கும் பக்ஷத்தில், அவர்கள் தூக்கில் தொங்கி மடிந்து தானே போயிருக்கவேண்டும், அப்படியும் ஆயுள் தண்டனைக்குத் தான் அவர்கள் ஏன் ஆளாக வேண்டும்? கலவரம் செய்யும்படி காங்கிரஸ், தூண்டிவிடாமலிருந்திருந்தால் அவர்கள் அந்த கதிக்கு ஆளாக சந்தர்ப்ப மேது? இந்த அக்கிரமத்தைத் தான் ஜவஹர் முதல் சகலரும் சொல்லுகிறார்கள். சுதந்தர எழுச்சி—அரசியல் புரட்சி-மக்களின் ஆவேசசக்தி என்று, எப்போர்க் கொத்த வியாக்யானம் பார்த்தீர்களா? (இதைப்பற்றி புள்ளி விவரங்களோடு பிறகு எழுதுகிறேன்.) ஜவஹரும் இதர காங்கிரஸ் தலைவர்களும் தங்களின் துர்க்கிருத்தியங்களுக்குக் கூறுகின்ற சமாதானத்தின் அழகைப் பாருங்கள்!

* * *

இந்த லக்ஷணத்தில் காங்கிரஸ் தலைவர்கள் சொல்கிறார்கள் யுத்த பிற்காலத்தில் தேசத்தின் நிலைமையை இப்போதுள்ளவர்களோ மற்றவர்களோ சமாளிக்கமுடியாது; காங்கிரஸ் சர்க்கார் மட்டுமே சமாளிக்க முடியும் என்று. சண்டைக்குச் சென்ற சிப்பாய்களெல்லாம் திரும்பிவந்து வேலை இல்லாமல் திண்டாடுவார்களாம்; அப்பேர்க் கொத்தவர்களுக்கெல்லாம் பிழைப்பதற்கு வழியும் ஜீவனத்துக்கு மார்க்கமும் காட்டப் போகிறார்களாம். ரக்ஷகர்களென்றாலும், காங்கிரஸ்காரர்களைப்போன்ற ரக்ஷகர்களை யாரும் வேறெங்கும் கண்டிருக்கமுடியாது! பொறுப்பை

(6-ம் பக்கம் பார்க்க)

# ஆற்காட்டில் மாபெரும் பொதுக்கூட்டம்

## ஜஸ்டிஸ் கட்சி கொள்கை விளக்கம்

### சர். பி. டி. ராஜனின் சொற்பொழிவு ★

‘‘ஜஸ்டிஸ் கட்சிக்காரர் எங்கேனும் ஒரு பொதுக்கூட்டம் கூட்ட முடியுமா? பொதுக்கூட்டத்தில் அவர்களில் யாரேனும் பேசமுடியுமா? பத்துப்பேர் கூடிப்பேசும் கூட்டத்திற்கு இருபது போலீஸ்காரர்களைக் காவலுக்கு வைத்துக்கொண்டுதான் அவர்களால்பேசமுடியும். பொது ஜனங்கள்முன் முகத்தைக் காட்டிப் பேசமுடியாதவர்கள் ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயருடன் ஜம்பம் அடிக்கிறார்கள்” என்று ஜஸ்டிஸ் கட்சியின் பெயரை வலிய இழுத்து வைத்துக்கொண்டு, ஜஸ்டிஸ் கட்சிக்குப் போட்டியாக திராவிடக் கழகம் என்பதாய் ஒன்றை உண்டுபண்ணிக்கொண்டு, ‘திராவிடக்கழகந்தான் ஜஸ்டிஸ் கட்சி, தெ. இ. ந. உ. சங்கந்தான் திராவிடக் கழகமாக மாறியிருக்கிறது’ என்று சொல்லிக்கொண்டும் எழுதிக்கொண்டும் வருகிற ஈ. வெ. ராசாமியின் சவாலுக்குப் பதில் சொல்வதுபோல் காணப்பட்டது ஆற்காடு ஜின்னா மைதானத்தில் 29—7—45ந் தேதி மாலை நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சியின் பொதுக்கூட்டம். சவடால்தனமாக சவால் விடும் வீரர்கள், அன்றைய தினம் ஆற்காட்டில் நடந்த பொதுக்கூட்டத்தைப் பார்த்திருப்பார்களானால் — அன்று பேசிய அறிஞர்களின் சொற்பொழிவையும், கூடியிருந்த மக்கள் இரவு 11–மணிவரை உற்சாகத்தோடு கேட்டுக்கொண்டிருந்து அமைதியாகக் கலைந்து சென்றகாட்சியையும் கண்டிருப்பார்களானால் - சவால் வீரர்களின் மண்டைக்கனம் நிச்சயமாக இறங்கிப்போயிருக்கும் என்று சொல்லலாம்.

சென்ற 29-7-45—உ வட ஆற்காடு ஜில்லாவின் 4–வது ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு ஆற்காடு ஜோதிதியேட்டரில் நடைபெற்ற வரலாற்றுச் சுருக்கம் சென்றவாரம் தூதனில் வெளியிடப்பட்டிருக்கிறது. அன்று மாலைதான் இந்தப் பொதுக்கூட்டம்.

தலைவர் சர். பி. டி. ராஜன் தலைமை வகித்து, ஒரு மணி நேரத்துக்கு மேல் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளை விளக்கிப்பேசினார்.

ஃ ஃ ஃ

தலைவரைத் தொடர்ந்து சனக சங்கர கண்ணப்பர் பேசும்போது ஜஸ்டிஸ் கட்சியின் சமூக சீர்திருத்தக் கொள்கைகளை விவரித்தார். ஸ்தல ஸ்தாபனங்களில் நியமனத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட சமூகத்தார் பதவி பெறுவதற்கு ஜஸ்டிஸ் கட்சி செய்தவசதிகளையும், அவ்வகுப்பாருக்குக்கல்வி வசதிக்கும், கிணறுகள் திறந்து குடிநீர் வசதிக்கும் சகல பொதுத் துறைகளிலும் தீண்டாமைக்கு இடமில்லாமல் செய்த காரியங்களையும், விவரித்துச் சொன்னதோடு, ஷெடியூல் வகுப்பு பிடரேன் ஏற்படுமுன் ஜஸ்டிஸ் கட்சிஒன்றுதான் தாழ்த்தபட்ட மக்களின் தாயகமாக விளங்கிய விவரங்களையும் கூறினார். ஜின்னா தலைமையில் லீக் இப்போதுள்ள அந்தஸ்தை அடைவதற்கு முன் ஜஸ்டிஸ் கட்சி முஸ்லிம்களுக்குச் செய்த உதவிகளையும் கூறினார்.

ஃ ஃ ஃ

நாகூர் மவுல்வி சையத் முகம்மது அவர்கள் அழகிய தமிழ் நடையில் அற்புதமாகப் பேசினார். தென்னாட்டு முஸ்லிம்களுக்கு நீதிக்கட்சி செய்துள்ள நன்மைகளை ஞாபகப்படுத்தி, முஸ்லிம்கள் நன்றிமறவாமல் நடந்துகொள்ள வேண்டுமென்றும், தங்களுடைய சுய நன்மைக்காக நீதிக் கட்சியார் முஸ்லிம்களை ஒரு நாளும் உபயோகப்படுத்திக்கொண்டதில்லைஎன்றும், ஒவ்வொருவரும் நீதிக்கட்சியில் சேர்ந்து தெ. இ. ந. உ. சங்கத்தைப் பலப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ஃ ஃ ஃ

அடுத்தபடியாகப் பேசிய எம். கே. குப்தாவை, அடிக்கடி கரகோஷங்களினாலும் ‘சபாஷ்’ சொற்களினாலும் கூட்டத்தார் உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தனர். காங்கிரஸ் மந்திரி சபையின் 27-மாத நிர்வாகத்தினால் மக்களுக்கு ஏற்பட்ட தொல்லைகளை புட்டுப் புட்டுக் காட்டினார், காங்கிரஸ் கொடி சகல பாப கிருத்தியங்களுக்கும் பரிகாரமாக உபயோகிக்கப்பட்டு வருவதையும் அடுக்கடுக்காக விவரித்தார். அவற்றைச் சொல்லிவிட்டு, ஜஸ்டிஸ் கட்சியானது அரசியல் அயோக்கியத்தனங்களை ஒழிப்பதற்காக ஏற்பட்ட நீதிக்கட்சி என்றும், ஜாதிமத பேதமற்ற சர்வசமய சமரசக்கட்சி என்றும், இக்கட்சி ஒன்றினாலேயே வடதேசத்தவரின் சுரண்டலிலிருந்து மட்டுமல்லாமல், தென்னாட்டிலேயே பிறந்து வளர்ந்து பாமர மக்களின் அறியாமையைப் பயன்படுத்தும் ஏகபோகிகளினின்றும் தமிழர்கள் முன்னேற முடியும் என்றும், தென்னாடு விடுதலையடைய முடியும் என்றும் விளக்கி, விரைவில் வரப்போகும் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிப்பதற்கான அவசியத்தையும் வற்புறுத்தினார்.

* * *

சிதம்பரம் என். தண்டபாணி பிள்ளை பேசும்போது மாஜி காங்கிரஸ்காரர் என்கிற முறையில், காங்கிரசில் பிராமணரல்லாதார் நிலையை விஸ்தரித்து, ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளுக்கும் காங்கிரஸ் கட்சி மந்திரிகளுக்குமுள்ள பேதா பேதங்களையும், காங்கிரஸ் மந்திரி சபையில் பிராமணரல்லாதாருக்கிருந்த கேவல அந்தஸ்தையும் சுட்டிக் காட்டினார்.

### சர். பி. டி. ராஜன்

கூட்டத்தின் தொடக்கத்தில் தலைவர் சர். பி. டி. ராஜன் பேசிய பேருரையை பொது மக்கள் கவனிக்கவேண்டியதவசியம். அவரது பேச்சின் சுருக்கம் இது:—

என் தமிழ் நாட்டு மக்களே, தமிழ் நாட்டுக்கோ தமிழ் மக்களுக்கோ நான் புதியவன் அல்ல. கடந்த ஐந்து வருஷங்களாக, என்னுடைய கட்சிக்குச் சாதகமாக நிற்கும்படி தமிழ் நாட்டு மக்களை ஒன்று திரட்டும் பணியில் நான் ஈடுபட்டிருக்கவில்லை; எல்லோரையும் யுத்தத்துக்கு உதவும்படியாய்க் கேட்டுக்கொண்டிருந்தேன். என்னுடைய வேண்டுகோளை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு என்னையும் கவுரவித்தார்கள். இதர நல்ல காரியங்களுக்கு உதவவேண்டுமென்று நான் வேண்டுகிற காலங்களில் அதைப்போலவே மனப்பூர்வமாக எனது கோரிக்கையை தமிழர்கள் ஏற்று ஒத்துழைக்கப் பின்வாங்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

### ஒரே இனம்

தமிழ் நாட்டிலிருக்கும் மக்கள் அனைவரும் பொதுவாக ஒரே கலாச்சாரங்களை உடையவர்கள்; வெவ்வேறு விதமான மதானுஷ்டான முறைகளை உடையவர்களாயினும் தமிழ் நாட்டிலிருப்போர் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். மதம் என்பது தனிப்பட்ட ஒரு நம்பிக்கை. மதமானது ஒரு தமிழரை இன்னொரு தமிழரினின்று பிரிக்கமுடியாதுஎன்பது என் எண்ணம். தமிழ் முஸ்லிம், தமிழ் கிறிஸ்துவர், தமிழ் இந்து, தமிழ் சமணர் என தமிழ்நாட்டிலுள்ள சகலருமே தமிழர் என்னும் பெரிய குடும்பத்தின் கிளைகள். எந்தவிதமான மார்க்க மதானுஷ்டானங்களைத் தழுவியவர்களாயினும் தமிழர் அனைவரும் தமிழ் கலாச்சாரப் பண்பை கவுரவிக்கவும் வளர்க்கவும் காக்கவும் வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி நான் சொல்வதைக் கொண்டு, எவர் மீதும் மாச்சர்ய உணர்ச்சியுடன் விரோதங்காட்டி நடக்க வேண்டுமென்று கூறுவதாக தப்பர்த்தம் செய்து கொள்ளக்கூடாது.

தெலுங்கு நாட்டிலுள்ள என் சகோதிரர்களும், ஒரே இன உணர்ச்சி கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களும் தங்களின் கலாச்சாரங்களை வளர்க்க வேண்டும்; அவர்களது பரம்பரையைக் கவுரவிக்கவேண்டும். கர்னாடக, கேரள நாடுகளிலுள்ள சகோதரர்களுக்கும் அதேவிதமாகத்தான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு கூட்டமும், அதனதன் பாஷாவாரியான பிரதேசத்துக்குள் இனப்பற்றை வளர்த்து ஒற்றுமை உணர்வு ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால், பொது லக்ஷியம் ஒன்றைக் குறித்து நமெல்லாம் ஒன்று சேர்ந்து போராடுவதற்கு முடியாமல் போகும்.

என்னுடைய கட்சி, அந்த அடிப்படையான கொள்கையைத்தான் கொண்டிருக்கிறது. அதைமுன்னிட்டுத்தான் இதற்கு ‘சவுத் இந்தியன் லிபரல் பிடரேஷன்’ அதாவது தென் இந்தியர்களின் கூட்டுறவுச்சங்கம் (S. I. L. F) என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பொதுவான நோக்கத்தை முன்னிட்டு, ஒரே பொது மேடையில், நால்வகை மொழிப்பிரிவாரும் கூட்டாகச் சேர்ந்துழைக்குங் காரணத்தால் தான் அறிஞர்கள் அதற்கு ‘பிடரேஷன்’ என்று பெயரிட்டார்கள். அப்படி நால்வரும் கூட்டாகச் சேர்ந்துழைத்தாலும், அவரவர்க்குள்ள தனிச்சுயேச்சையை இது பாதிக்காது. நான் ஆந்திர நாட்டுக்குப் போகுங்காலங்களில் இதே விதமாகத்தான் அங்குள்ளோரைக் கேட்டுக்கொள்வேன்.

தனித்த சுயேச்சை எண்ணம் உண்டாகாவிட்டால் கூட்டுறவு உணர்வை உண்டாக்க முடியாது. இந்தக் கருத்தை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கிக்காட்ட விரும்புகிறேன். அநேக வீடுகள் அடங்கிய தெருவில் நாம் வசித்து வருகிறோமானாலும், நம்முடைய வீட்டின் நிர்வாகத்தைப் பொது மனிதரிடம் ஒப்படைப்பதில்லை; நம்முடைய வீட்டை நாமே தான் தனிப்பட பரிபாலித்துப் பலப்படுத்திக் கொள்ளுகிறோம். அப்படியிருந்தாலும் ஒரு திருடன் தெருவுக்குள் நுழைந்துவிட்டால் நாமெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அவனை விரட்டியடிப்பதில் ஈடுபடுகிறோம். அதுபோலவே, பொதுவான ஒரு காரியத்தில் தனித்தனி மொழிப்பண்புடைய நால்வகைக் கூட்டத்தாரும் ஒன்று சேர்ந்துகொள்ளவேண்டும். அதே சமயத்தில், ஒவ்வொரு பாஷையை

(5-ம் பக்கம் பார்க்க)

பதிவு செய்யப்பட்ட

## சுயமரியாதை சங்கக் கிளைகள் ஆரம்பம் ★

### சித்தயன்கோட்டை

1945-ஆ ஆகஸ்ட்-மீ 24உ மாலை 3 மணிக்கு சித்தயன் கோட்டை திரு. V. S. S. மணி அவர்கள் தலைமையில் சுயமரியாதை சங்க அங்கத்தினர்கள் கூடி சித்தயன் கோட்டையில் சுயமரியாதை சங்க கிளை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவராக V. S. S. மணி அவர்களையும், காரிய தரிசியாக திரு R. S. பரமசிவம் அவர்களையும் பொக்கிஷதாராக V. S. காசி விஸ்வநாதன் அவர்களையும் மற்றும் கமிட்டி மெம்பர்களாக ஏழு பெயர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது. நன்றி கூறலுடன் தேநீர் வழங்கப்பட்டது.

### பட்டிவீரன்பட்டி

1945-ஆ ஆகஸ்ட்-மீ 24உ இரவு 9 மணிக்கு பட்டிவீரன் பட்டி W. P. A. சௌந்திர பாண்டியன் அவர்கள் பங்களாவில் திரு. தா. சி. ராமசாமி அவர்கள் தலைமையில் சுயமரியாதை கிளைச்சங்கம் பட்டிவீரன்பட்டியில் நிறுவப்பட்டது. தலைவராக C. V. கருத்தபாண்டியன் அவர்களையும் காரியதரிசியாக தோ. ந. ச. மீனாக்ஷிசுந்தரம் அவர்களையும் பொக்கிஷதாராக A. K. நடராஜன் அவர்களையும் மற்றும் கமிட்டி அங்கத்தினர்களாக ஒன்பது பேர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

### மதுரை

1945-ஆ ஆகஸ்ட்டு-மீ 25-உ பகல் 11 மணிக்கு மதுரை வடக்காவணி மூலவீதி 75 நி. இல்லத்தில் திரு. W. P. A. சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைமையில் சுயமரியாதை சங்க அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெற்றது. மதுரை சுயமரியாதை சங்க கிளையை ஆரம்பித்து வைக்கப்பட்டது. சங்கத் தலைவராக திரு. P. ஜெதின் அவர்களையும் காரியதரிசியாக திரு. A. வேணுகோபால் அவர்களையும் பொக்கிஷதாராக M. தங்கராஜ் அவர்களையும் மற்றும் கமிட்டி மெம்பர்களாக ஐவரையும் தேர்ந்தெடுக்கப்பட்டது. நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

---


# நியூ இந்தியா

## அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ் : பம்பாய்

### தீ, ஆயுள், கப்பல், விபத்துகள்

முதலிய இன்ஷூரன்ஸ்கள் செய்யப்படுகின்றன.

தலைவர் — ஸர். சுனிலால் வி. மேதா.
உப தலைவர் — ஸ்ரீ. ஜே. ஆர். டி. டாடா.

### ஆயுள் இலாகா சம்பந்தமான விவரம்

1944-ம் வருஷத்தில் செய்யப்பட்ட புது பிஸினஸ் — ரூ. 6 கோடிக்கு அதிகம்.
1944-ம் வருஷம், டிசம்பர் மாதம் 31ந் தேதி வரைக்கும் செய்யப்பட்ட பாலிஸிகளின்மொத்த தொகை ரூ. 21 கோடிக்கு அதிகம்.

### பொருளாதார புள்ளி விவரங்கள்

| | |
|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 71,21,055. |
| மொத்த நிதி | ரூ. 6 கோடிக்கு அதிகம் |
| மொத்த இருப்பு (சுமார்) | ரூ. 8 கோடி |
| ஆரம்ப முதல் கிடைத்த பிரிமியம் வருமானம் | ரூ. 22 கோடிக்கு அதிகம் |
| கொடுக்கப்பட்ட மொத்த உரிமைத் தொகை | ரூ. 11 கோடிக்கு அதிகம் |

இன்ஷ்யூர் செய்வதற்கோ அல்லது பிரதிநிதியாக இருப்பதற்கோ சிறந்த இந்திய கம்பெனி.

சென்னை கிளை ஆபீஸ், 4 & 5, பஸ்டுலேன் பீச் — கே. கணபதி, பிராஞ்சு மானேஜர்.


### வெற்றி மகிழ்ச்சி

சைனாவைப் படுநோய் போல் பற்றிக்கொண்டிருந்து, பிரிட்டிஷ் அமரிக்கத் தீவுகளையும் பற்றிப் பிடித்த கீழ் திசை ஜப்பான் நேச நாட்டிடம் சரண் அடைந்து உயிர் தப்பியது மூலம் மகாயுத்தம் முடிவடைந்ததற்கும், நேச நாட்டிற்கு கிடைத்த வெற்றிக்கும், முன்பு மேற்றிசை நாஜிஸ ஜெர்மனி வீழ்ச்சியடைந்த வெற்றிக்கு 9-5-45-ல் சந்தோஷமடைந்தது போலவே சந்தோஷமடைகிறோம்.

இனி இந்திய இந்துமதவர்ணாசிரம முன்னணி வகுப்பார்களிற் சிலர் இந்திய காங்கிரஸ் கிளர்ச்சியின் மூலம் இந்திய அரசியல் அதிகாரத்தைக் கவர்ந்து பிறவியினால் உயர்வு தாழ்வும் துவேஷமும் கற்பிக்கப்படுகிற இந்துமத வர்ணாசிரம மத்தியதர வகுப்பினர்களையும், தாழ்த்தப்பட்ட (ஷெடியூல்ட்) வகுப்பினர்களையும், இந்திய கிறிஸ்தவ, முஸ்லீம் மதத்தினர்களையும்; இதர சிறுபான்மை வகுப்பினர்களையும் அடக்கி ஒடுக்கி பல வரிகளைச் சுமத்தி ஆளலாமென்று எண்ணிக்கொண்டிருக்கிற நாஜிஸக் கொள்கைக்கு இந்திய அரசியலை பலி செய்துவிடாமல் இந்திய சர்க்காரும், பிரிட்டிஷ பாராளு மன்றத்தாரும் புத்திசாலித்தனமாக நடந்துகொள்வதன் மூலம் ஒழிக்கப்படும் இந்திய காங்கிரஸ் நாஜியை ஒழிப்புக்கொண்டாடும் தினத்தை வெகுஆவலுடன் எதிர்பார்த்திருப்போமாக.

கு. அ. புன்னைமுத்து.
கல்லூரிணி.

---

### திருச்சி நகரசபை

25-8-44-தேதி சேர்மன் திரு. P. ரெத்னவேலு தேவர் அவர்கள் தலைமையில் திருச்சி நகர சபை கூடி, நகர சபை கமிஷனர் பதவிக்கு ஐ. சி. எஸ். அதிகாரியாக நியமனம் செய்யவேண்டுமென்று சர்க்காரை கேட்டுக் கொள்வதாக தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

### காலமானார்

'ஆர்மோனிய சக்ரவர்த்தி' 'சோகரசத் திலகம்' 'ஹிந்துஸ்தான் கவாய்' முதலிய பட்டங்கள் பெற்றவரும், நவாப் T. S. ராஜமாணிக்கம் அவர்களின் குருவுமான K. T. நடராஜ பிள்ளை 18—8—45—ல் கும்பகோணம் தமது இல்லத்தில் 52—வது வயதில் காலமானார்.

### S. I. R. தொழிலாளர் வாரம்

தென்னிந்திய ரயில்வே பொன்மலை வொர்க்ஷாப்பில் 24- தொழிலாளர்களை நீக்கிவிட்டதன் காரணமாக தென்னிந்திய ரயில்வே தொழிற் சங்கத்தின் ஆதரவில் 15-8-45 தேதி முதல் 24-8-45-தேதி வரையில் திருச்சி நகரத்தில் பல இடங்களிலும் பொன்மலையிலும் பல கூட்டங்கள் நடத்தப்பட்டன. புத்தூர் மைதானத்தில் 20-ஆயிரம் தொழிலாளரும், பொதுஜனங்களும் அடங்கிய ஒரு மாபெரும் கூட்டம் நடைபெற்றது. பொன்மலையிலிருந்து 6000—ரயில்வே தொழிலாளர் 2—மைல் நீளமுள்ள ஊர்வலமாக 'உழைக்கிறோம். உணவு கொடு வயிற்றிலடிக்காதே பாதுகாப்பு சட்டத்தை ரத்து செய்க' முதலிய கோஷங்களை கோஷித்துக் கொண்டு புத்தூர் மைதானத்தை யடைந்தனர்.

திருச்சி ஜங்ஷனிலிருந்து சுமார் 600 ரயில்வே கிளார்க்குகளும் லோகோஷெட்டிலிருந்து சுமார் 400 தொழிலாளரும், ஊர்வலமாக கூட்டத்திற்கு வந்தனர். சுமார் 200 சைக்கிள் ஊர்வலக்காரர்கள் முக்கிய தெருக்களில் சென்றனர். தென் இந்திய ரயில்வே தொழிற் சங்கத்தின் மத்ய சங்க தலைவரும் தொழிலரசு ஆசிரியருமான திரு. எஸ். கலியாணசுந்தரம் கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசுகையில் ரயில்வே தொழிலாளர்களது பிரச்னைகளையும் சேவகத் தொழில் அபிவிருத்தியின் அவசியத்தையும் தொழிலாளர் வேலை நேரம் சம்பள உயர்வு போன்றவிஷயமும்பற்றி சொற்பொழிவாற்றி, வருங்காலத் தொழில் அபிவிருத்திக்கு தற்காலிக தொழிலாளர்களது மனித உழைப்பும் சேவையும் மிக மிக அவசியமென்றும், இந்தியாவின் உற்பத்தி பிரச்னைக்கு அவர்கள் நிரந்திரமாக வேலையில் அமர்த்தப்படவேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசினார். வரப்போகும் தேர்தலில் தொழிலாளர் நன்மைக்கு உழைக்கவல்ல ஸ்தாபனத்திற்கு ஆதரவளிக்க வேண்டியதின் அவசியத்தை எடுத்துக்கூறினார்.

தென் இந்திய ரயில்வே தொழிற் சங்க பொதுக்காரிய தரிசி திரு. கே. நம்பியார் கெ. எ. சாரி நாகராஜன் (மாணவர்) முதலியவர்கள் பேசினார்கள்.

---


ஐந்து வருஷத்திற்கு மேல் 47 வருஷங்களாக புகழ் பெற்று வரும் ஜலால் பீடி
சேலம்
M.S.A. & A.S.J.
பீடிகளை உபயோகியுங்கள்
TRADE MARK REGD- №785 M.S.A
TRADE MARK S A J REGD № 597
TEL. JALAL. SALEM.
A. சையது ஜலால் சாஹெப்
ஜலால் பில்டிங்ஸ் .... சேலம்.

# நகரதூதன்

திருச்சி 26—8—45.

## பீஹாரும் சென்னையும்

**1937**—ல் காங்கிரஸ் மந்திரிகள் மாகாண அரசியலை நடத்த முற்பட்டதும், அவர்கள் முதலடியாகச் செய்த அற்புதமான வேலை 'மிஸ்டர்' 'மகா—ா—ா—ஸ்ரீ' என்னும் அழைப்பு மரியாதை வார்த்தைகளை 'ஸ்ரீ' என்று மாற்றியதுதான். 'மிஸ்டர்' என்பது பிரிட்டிஷார் உபயோகிக்கும் சொல். 'மகா-ா-ா-ஸ்ரீ' என்பது இந்தியர்களுக்காக - இந்தியரை —கவுரவமாக அழைக்கும் சொல். இந்த இரண்டையும் மாற்றி, பெயர்களுக்கு முன் 'ஸ்ரீ' என்றே உபயோகித்தல் வேண்டும் என்று சென்னையில் காங்கிரஸ் மந்திரிகள் ஜி. ஓ. பிறப்பித்தனர். அன்று முதல் இன்றுவரை அந்த உத்திரவு ஆலோசகர்கள் நிர்வாகத்தில் கூட —கவுரவிக்கப்பட்டு அமலில் இருந்து வருகின்றது.

'ஸ்ரீமான்' 'ஸ்ரீமதி' என்று காங்கிரஸ்காரர்களால் தங்கள் பிரசங்க மேடைகளிலும் பத்திரிகைகளிலும் வெகுவாக உபயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்த சொற்களின் சுருக்கம் தான் 'ஸ்ரீ' என்பது. தங்களால் உபயோகிக்கப்படும் சொல்லை -எழுத்தை சர்க்கார் தஸ்தாவேஜிகளிலும் ஏற்றி அமலுக்குக் கொண்டுவரவேண்டும் என்பது தான் அவர்களுக்குள்ள ஆசை. அந்த ஆசையை நிறைவேற்றிக் கொண்டார்கள் அதிகாரம் தங்கள் வசம் இருக்கிற காலத்தில். ஸ்ரீமான், ஸ்ரீமதி அதாவது 'ஸ்ரீ' என்பது தமிழ்ச் சொல் அல்ல. திராவிட மொழிகள் நான்குக்கும் உரியதல்ல; அது வடமொழிக்கு உரியது. 'ஸ்ரீஜத்' என்றனர் சில காலம்; 'ஸ்ரீமான்' என்கின்றனர் இப்போது. சென்னையிலிருந்த காங்கிரஸ் சர்க்கார் 'ஸ்ரீ' என்பதைப்பற்றி ஜீ. ஓ. பிறப்பித்ததும் தமிழர்கள் ஆக்ஷேபித்தனர். காங்கிரஸ் மந்திரிகள் தொலைந்த பிறகும் 'ஸ்ரீ' என்பதை 'திரு' என்று மாற்றவேண்டுமென்று ஜஸ்டிஸ் கட்சியார் கிளர்ச்சி செய்ததும் பலருக்கு ஞாபகமிருக்கும். 'திரு' என்பதற்கு பொதுஜன ஆதரவு வேண்டும் என்கிற காரணத்தை வைத்து, காங்கிரஸ் மந்திரிகளின் ஏற்பாட்டை ஆலோசகர்கள் மாற்றவில்லை.

காங்கிரஸ்காரர்கள் எது செய்தாலும் அகில இந்திய சம்பந்த முடையதாயிருக்கும் என்று பலரால் நினைக்கப்பட்டது. 'ஸ்ரீ' என்ற மரியாதைக் குறிப்பை மற்ற மாகாணங்களிலும் அமலுக்குக் கொண்டுவந்து, இந்தியா எக்கண்டமும் அதையே உபயோகிக்கும்படி செய்திருப்பார்கள் என்று அநேகர் நினைத்தது உண்டு. ஆனால் இதர மாகாணங்களில் அந்த சொல் அமலுக்கு வரவில்லை என்பதை, பீஹார்மாகாணத்தின் சர்க்கார் சமீபத்தில் பிறப்பித்த ஓர் உத்திரவிலிருந்துதான் தெரிந்துகொள்ள வேண்டிய தேற்பட்டது.

'பாபு' என்று அழைக்கப்பட்டு வந்ததற்குப் பதில், இனி 'மிஸ்டர்' (Mr.) என்றே அழைக்கவேண்டும் என்று, பீஹார்மாகாண சர்க்கார் உத்திரவிட்டிருப்பதாக ஓரியண்டல் செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது. இதிலிருந்து பீஹார் மாகாணத்தில் காங்கிரஸ் சர்க்கார் இருந்த காலத்தில் 'பாபு' என்ற சொல்லை அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. காங்கிரஸ் மந்திரிகள் செய்த அந்த ஏற்பாடு இப்போது மாற்றப்பட்டிருப்பதால், அதே வழியை சென்னை சர்க்காரும் ஏன் பின்பற்றக் கூடாதென்று கேட்கிறோம்.

'ஸ்ரீ' என்னும் எழுத்தைப் பார்க்கும் போதெல்லாம், சென்னை மாகாணத்திலுள்ள தமிழர் அவமானத்தால் வெட்கிக்கின்றனர்; துக்கிக்கின்றனர். ஜர்மன் நாட்டு மரியாதைச் சொல்லை பிரிட்டிஷார் ஏற்றுக்கொள்ளுவார்களா? ஜர்மனி இப்போது நேச தேசங்களின் நிர்வாக மேற்பார்வைக்குள் அடக்கப்பட்டுவிட்டது. மேலதிகாரம் நேச தேசத்தாரிடம் இருப்பதை முன்னிட்டு 'மிஸ்டர்' என்னும் ஆங்கில, அமெரிக்கச் சொல்லையோ 'மொஸே' என்னும் பிரஞ்சு சொல்லையோ 'காம்ரேட்' என்னும் பொது உடமைச் சொல்லையோ ஜர்மனியர் மீது திணித்தால், அவற்றை அவர்கள் மனமொப்பித் தழுவிக்கொள்வார்களா? ஒப்பமாட்டார்கள்.

அது போலவே தான் 'ஸ்ரீ' என்னும் சொல்லை தமிழர் அருவருக்கின்றனர். எனவே சென்னை சர்க்கார் பீஹார் மாகாண சர்க்காரைப் பார்த்

## ஜஸ்டிஸ் (S. I. L. F) தமிழ் மண்டலக் கூட்டம்

### ராவ்பகதூர் சாமியப்பா தமிழ் மண்டலத் தலைவரானார்

தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் (ஜஸ்டிஸ் கட்சி) தமிழ் மண்டலக்கமிட்டிக் கூட்டம் கோயம்புத்தூர் மோட்டார் மன்னர் உயர் திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் சினிமா தொழிற் பயிற்சி மண்டபத்தில் கட்சித் தலைவர் திரு. ஸர். பி. டி. ராஜன் அவர்களின் தலைமையில் 26—8—45ந் தேதி, பிற்பகல் 3 மணிக்கு கூடியது. திருவாளர்கள் ஸர். பி. டி. ராஜன் மதுரை, K.C. சுப்ரமண்யம் செட்டியார் பாரிஸ்டர் சென்னை, M. தாமோதரநாயுடு அட்வோகேட் சென்னை, P. கஸ்தூரி பிள்ளை சேலம், ராவ் பகதூர் N. R சாமியப்ப முதலியார் கிழக்குத் தஞ்சை. S. கல்யாணசுந்தர முதலியார் அட்வோகேட் திருத்துறைப்பூண்டி, S.சொக்கலிங்கம் B A. சென்னை, S. V. V. சீனிவாசலு நாயுடு பொள்ளாச்சி, கே. ஆ. பெ. விசுவநாதம், M. R. திருமலைசாமி, S.ராமசாமி திருச்சி, S.A. மாணிக்கம் சூலூர், திவான் பகதூர் C. S. ரத்தினசபாபதி முதலியார், V. பழனிசாமி நாயுடு, மோட்டார் மன்னர் ஜி. டி. நாயுடு, ஜே. எஸ். கண்ணப்பர், S. செங்கோட்டையா, N. நஞ்சுண்டையா, A. நஞ்சப்ப செட்டியார், C. V. வேணுகோபால், A. T. தேவராஜுலு செட்டியார், S. பீமய்ய செட்டியார், A. T. கிருஷ்ணசாமி செட்டியார், சுவாமி கைவல்யம் கோவை ஆகிய பிரமுகர்கள் விஜயஞ்செய்திருந்தனர். தலைவர் ஸர். பி.டி. ராஜன் அவர்கள் கட்சியின் ஆக்க வேலைகளைப் பற்றியும், எதிர்காலத்தின் ஜஸ்டிஸ் கட்சியின் திட்டம் என்பது பற்றியும் விளக்கிக் கூறினார்கள். தமிழ் மண்டல ஜஸ்டிஸ் கட்சி தலைவராயிருந்த உயர் திரு. ஸர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் ராஜினமா செய்த காலி ஸ்தானத்திற்கு உயர்திரு ராவ்பகதூர் N. R. சாமியப்ப முதலியார் M. L. C. அவர்களை தமிழ் மண்டலத் தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர் தலைவர் சாமியப்பா அவர்கள் தமிழ் நாட்டில் ஜஸ்டிஸ் கட்சி வெற்றியோடு நடைபெற தன்னுடன் தமிழ்நாட்டு மக்கள் ஒத்துழைக்க வேண்டுமென்றும், தமிழ்மண்டலத் தலைவராக தேர்ந்தெடுத்தற்கு நன்றி செலுத்துவதாகவும் கூறினார்கள். பின்னர் வரப்போகும் மத்திய—மாகாண சட்ட சபைத் தேர்தலில்களில் நமது ஜஸ்டிஸ்கட்சியார் கலந்து கொள்வதுபற்றி ஜி. டி. நாயுடு செங்கோட்டையா, ஜே. எஸ். கண்ணப்பர் ஆகியோர்களால் பேசப்பட்டது. விரைவில் நடைபெறப்போகும் மாகாண S. I. L. F. நிர்வாக கமிட்டி கூட்டத்தில் இதுவிஷயம் முடிவு செய்யலாமென்று தலைவர் அவர்களால் பதில் கூறப்பட்டது. பின்னர் கட்சிக்கு முழு நேரம் வேலை செய்யும் பிரசாரகர் ஜில்லாதோறும் நியமிக்கவேண்டுமென்றும் கட்சிக்கு தினசரிப் பத்திரிகை விரைவில் ஆரம்பிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. கட்சிப் பொது நிதிக்கு தஞ்சை ஜில்லா கோட்டாவின் பகுதி ரூ. 1500ம் கோவை ஜில்லாவின் கோட்டா ரூ. 2500ம் தலைவர் சாமியப்பா அவர்களாலும் திரு. S. செங்கோட்டய்யா அவர்களாலும் செக் மூலம் வரவு வைக்கப்பட்டது. தலைவர் ஜி. டி. நாயுடு அவர்களால் சிற்றுண்டி விருந்து அளிக்கப்பட்டு திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களால் நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

இதாவது ஜஸ்டிஸ் கட்சியாரின் பழைய கோரிக்கையை நிறைவேற்றிக்கொடுக்க முன்வரவேண்டும். பொதுத்தேர்தலுக்குப் பின்ஏற்படும் மந்திரிகள் அதைச் செய்து கொள்ளட்டும் என ஆலோசகர்கள் இருப்பார்களானால் அது பெருந் தவறு. பீஹாரில் அதைச் செய்தவர்கள் ஆலோசகர்கள் தான் என்பதை சென்னை ஆலோசகர்களுக்கு நினைவுறுத்துகிறோம்.

### சேலம் ஜில்லா தமிழிசை மாநாடு வரவேற்புக் கமிட்டி கூட்டம்

சேலம் ஜில்லா தமிழிசை மாநாடு நடத்துவதுபற்றி யோசிக்கவும், வரவேற்புக் கமிட்டி தேர்ந்தெடுக்கவும் ஒரு பொதுக் கூட்டம் உயர் திருவாளர் A. கணேசசங்கர் B.A.,B.L அட்வகேட், அவர்கள் தலைமையில் 2-9-45உ ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சேலம் சென்ட்ரல் ஹாலில் நடைபெறும். தமிழிசை வளர்ச்சியில் ஆர்வமுள்ள தோழர்கள் அனைவரும் ஷை கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

**S. ராஜகோபால் செட்டியார்.**
சேலம் ஜில்லாபோர்டு மெம்பர்.
**S. C. ரங்கசாமி பிள்ளை.**
ஆர்கனைசர்கள்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உடைய கூட்டமும் அதனதன் சொந்த உள்நாட்டு அலுவல்களைக் கவனித்துக் கொள்ளுவதற்கான சுதந்திரமும் இருந்து வர வேண்டும்.

## அரசியல் நோக்கம்

இனி, என்னுடைய கட்சியின் அரசியல் நோக்கத்தை விளக்க விரும்புகிறேன். தரித்திரத்தை ஒழிக்க வேண்டும்; எல்லா மக்களுக்கும் இலவசமாக ஆரம்பக்கல்வி முதல் உயர்தர படிப்பு வரை அளிக்க வேண்டும்; கைத்தொழிற் கல்வியை அதிகப்படுத்தி அபிவிர்த்தி செய்ய வேண்டும்; எல்லாருக்கும் வேலை கிடைக்கும்படி செய்யவேண்டும்; லேவாதேவிக்காரர்களின் பிடிப்பிலிருந்து குடியானவர்களை விடுவிக்க வேண்டும்; எல்லா வகையான போக்குவரவு சாதனங்களையும் பெரியதொழிற்சாலைகளையும்பொதுமக்களுக்கு உரியதாய் சர்க்கார் நிர்வாகத்துக்கு உட்படுத்தவேண்டும். ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகள் இவைதான். இவைகள் அத்தனையும் செய்தாகவேண்டும். நமது ஜஸ்டிஸ் கட்சி மீண்டும் அதிகாரத்துக்கு வருமானால் இந்த நோக்கங்களை அமலுக்குக் கொண்டுவந்தே தீரும்.

தேசத்துக்கு அத்தியாவசியமான இந்த நோக்கங்கள் நிறைவேறுவதற்காக பொதுமக்கள் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நமது எதிர்க் கட்சியார் பொதுமக்களிடம் இதைவிட நல்ல நோக்கங்களை சமர்ப்பிப்பார்களானால், தங்கம்போலச் செய்யட்டும்! அதனால் நான் முணுமுணுக்கமாட்டேன். ஜஸ்டிஸ் கட்சி திட்டமான கொள்கைக்காக சேவை செய்யப்போகிறது; இதர கட்சியார் அதேகொள்கைகளை வெளியிட முன் வருவார்களானால் நாங்கள் ஆதரிக்கத் தயார்.

வேவல் திட்ட விஷயத்தை உதாரணமாக வைத்துக்கொள்ளுங்கள். சிம்லா மகாநாட்டுக்கு எங்கள் கட்சி அழைக்கப்படாதிருந்தும், நாங்கள் அந்த மகாநாட்டை முழு மனதோடு ஆதரித்தோம். ஏனென்றால், எங்கள் கட்சியின் பிரதான கொள்கையாகிய வகுப்புவாரிப்பிரதிநிதித்துவ முறையை, சர்க்காரை அமைக்கும் விஷயத்தில் சர்க்காரும் சரி, காங்கிரசும் சரி, ஒப்புக்கொண்டு விட்டன. அதைப் போலவே எங்கள் கொள்கைகளைப் போன்றவற்றை இதர கட்சியாரும் கொண்டிருப்பார்களானால் நாங்கள் ஆதரிக்கவே செய்வோம்

## தேர்தல் வரும்போது

தேர்தல்கள் வருங்காலத்தில் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்று எங்களைக் கேட்கிறீர்கள். நமது அபிப்பிராயம் திட்டமாகவும் தெளிவாகவும் இருக்கின்றது. நாம் தேர்தலில் போட்டி போடத்தான் போகிறோம். அதில் நாம் தோல்வி அடைந்தாலும் அடைவோம்; வெற்றி பெற்றாலும் பெறுவோம். நாம் மட்டுமே வெற்றி பெறுவோம் என்று போரில் இறங்கப் போவதில்லை. வெற்றி–தோல்வி எல்லாருக்கும் பொது. தோற்பதும் ஜெயிப்பதும், தேர்தல் போராட்டத்தை நாம் நடத்துகிற தோரணையில் அடங்கியிருக்கிறது. நம்முடைய நோக்கங்களையும் நமக்குப் போட்டியாக நிற்பவர்களுடைய நோக்கங்களையும் தீர்க்கமாகவும் நிதானமாகவும் ஓட்டர்கள் பரிசிலனை செய்வார்களானால், ஓட்டர்களின் பரிபூரணமான ஆதரவு நமக்குக் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மத்திய சர்க்காரின் நிர்வாக சபை, வகுப்வாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையை அனுசரித்து நிறுவப்படும் என்று தெளிவுபடுத்திக் கூறிய வேவல் திட்டத்தின் பேரில் வந்த அழைப்பை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டதன் பொருட்டு நான் சந்தோஷப்படுவது ஒரு புறமிருக்க, அதற்கு மேல் ஒரு படி அதிகமாகச் சென்று, காங்கிரஸ் சமர்ப்பித்த ஜாப்தாவின் மூலமும் அந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையை அது ஒப்புக்கொண்டிருப்பது பற்றி பெருமகிழ்ச்சி கொள்ளுகிறேன். நமது கொள்கையே சிறந்தது என்பதற்கு இதைக்காட்டிலும் வேறென்ன அத்தாக்ஷி வேண்டும்? நாம் என்ன சொல்லிவந்தோமோ, அதை, நாம் பதவியிலிருந்த காலத்தில், நமக்கிருந்த அதிகாரம் சொற்பமாக இருந்தாலும், நிறைவேற்றி வந்தோம். சென்னை சர்க்காரில் நமக்குப் பாதி அதிகாரம் மட்டிலுமிருந்திருந்தாலும், நமக்குப் பெருமை அளிக்கத்தக்க சில சட்டங்களைச் செய்திருக்கிறோம். ஆனால் நமக்குப்பின், முழு அதிகாரத்துடன், காங்கிரஸ் பதவி வகித்திருந்தும் நாம் செய்தவற்றைக்கூட அவர்கள் அபிவிருத்திசெய்யக்கிடையாது. காங்கிரஸ் கட்சி மீது குற்றஞ் சுமத்தவேண்டுமென்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. எதிர்க் கட்சிக்காரன் என்கிற முறையில் அந்த உரிமை எனக்கு உண்டு என்பது வாஸ்தவமானாலும், பொதுஜனங்கள் உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே அதை நான் குறிப்பிட வேண்டியதாயிற்று.

## உரிமைக்கு உத்திரவாதம்

தமிழ் நாடு தமிழருக்கே; தெலுங்கு நாடு தெலுங்கருக்கே; கேரள நாடு கேரளருக்கே; கன்னட நாடு கன்னடியருக்கே; என்பதற்காகவே ஜஸ்டிஸ் கட்சி இருந்து வருகிறது! பாஷாவாரியான ஒவ்வொரு இனமும் பூரண ஐக்கிய மேன்மையையும் தனிச் சிறப்பையும் உணராவிட்டால், இந்த நான்கு கூட்டத்தாரும் ஒரு மனப்பட்டு தேச முன்னேற்றத்துக்கு உழைக்கமுடியாது. ஒரு கூட்டத்தை மற்றொரு கூட்டம் சுரண்டுவதை ஜஸ்டிஸ் கட்சி ஆதரிக்காது! பிறரைச் சுரண்டுதல், ஏகபோகமாய் ஒருவரே அனுபவித்தல் இந்த இரண்டுக்கும் ஜஸ்டிஸ் கட்சி பரம விரோதி! எல்லோர் முன்னிலையிலும் நின்று நான் ஒரு உறுதி அளிக்கிறேன். நாங்கள் பதவிக்கு வருவோமானால் ஏதோ ஒரு வகுப்பாரின் உரிமைகளை அழித்து விடுவோம் என்று பயப்படவேண்டாம். அதிகாரம் எங்கள் கையில் இருக்கிறது என்ற ஆணவத்தை ஒருநாளும் ஜஸ்டிஸ் கட்சி கடைப்பிடிக்காது; ஒவ்வொரு வகுப்பாருக்கும், அந்தந்த வகுப்பாருக்குரிய நியாயமான பாத்தியதைகளுக்கு ஜஸ்டிஸ் கட்சி பாதுகாப்பு செய்துகொடுக்கும் என்று வாக்குறுதி அளிக்கிறேன். இதற்கு ஆதாரமாக ஒரு உண்மையை சகலரும் தெரிந்து கொள்ளவேண்டும். பிற்போக்கான நிலையிலிருந்த சில வகுப்பார்களும் அவரவர்களுடைய பாத்யதையைப் பெறவேண்டுமென்பதற்காக, அவர்களுக்குக் கல்விச்சவுகரியம்செய்து கொடுப்பதிலும் சர்க்கார் உத்தியோகங்களில் சேர்க்கப்படுவதிலும் விசேஷ சலுகைகள் காட்டப்படவேண்டுமென்னும் நியதி சட்டப்புத்தகத்தில் ஏறும்படி செய்தது ஜஸ்டிஸ் கட்சி என்பதை பொதுமக்கள் மறந்துவிடப்படாது.

1919–ம் வருஷத்திய இந்திய மசோதாவைப் பொறுத்து இங்கிலாந்தில் நடந்த பார்லிமெண்ட் கூட்டுக்கமிட்டி முன் தாழ்த்தப்பட்ட வகுப்பார்களுக்குள்ள குறைகளை எடுத்துச் சொல்லி சாக்ஷியம் அளித்தது ஜஸ்டிஸ் கட்சி என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித்தொகுதி அளிக்கவேண்டுமென்பதாய் இந்நாளிலேயே போராடியவர் ஜஸ்டிக் கட்சியாரான சர். எ. ராமசாமி முதலியார் என்பதை ஞாபகப் படுத்துகிறேன். நாங்கள் பதவியிலிருந்த காலத்தில், தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்னென்ன சவுகரியம், உரிமை அளிக்க முடிந்ததோ அவ்வளவையும் செய்தோம். அப்படி சவுகரியங்கள் செய்து கொடுக்கும்போது தயாவிஷயமாகவோ இரக்கச் சிந்தையோடோ செய்கிறோம் என்ற நினைப்புக் கொள்ளவில்லை. அந்த சவுகரியங்களை, அந்த உரிமைகளை அவர்கள் அடைய பாத்தியப்பட்டவர்கள் என்கிற எண்ணத்துடனேயே, பல காலமாக செய்த தவறுகளுக்குப் பரிகாரமாக அவற்றைச் செய்து வந்தோம்.

ஆகவே நியாயமான பாத்தியதைகளை ஆதரிக்க நாங்கள் கடமைப் பட்டவர்கள். முஸ்லிம் லீக் மேன்மையை அடைவதற்கு முன், முஸ்லிம்களுக்குப் போராடும் ஸ்தாபனமாக, ஜஸ்டிஸ் கட்சி உணர்ந்து வேலை செய்து வந்தது. அதே மாதிரி இந்தியக் கிறிஸ்துவர்களுக்குப் பரிந்து பேசும் ஸ்தாபனமாகவும் ஜஸ்டிஸ் கட்சி இருந்து வந்திருக்கிறது. அந்த வகுப்பார்கள் இப்போது ஜஸ்டிஸ் கட்சியை விட்டுப் போய்விட்டாலும், ஜஸ்டிஸ் கட்சிமட்டும் முன் போலவே அவர்களுக்காகவும் பாடுபடத்தான் செய்கிறது.

## எல்லோரும் தலைவர்கள்

அறிவும் விதரணையுமுள்ள உங்கள் முன் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். தனிப்பட்ட மனிதர்களின் யோக்யதாம்சையை மட்டும் ஜஸ்டிஸ் கட்சி நம்பி வாழவில்லை. இன்றைக்கு நான் ஜஸ்டிஸ் கட்சிக்குள் இருப்பேன்; நாளைக்கு இதை விட்டு விலகி ஓய்வு எடுத்துக்கொண்டாலும் கொள்வேன்; ஆனால் ஜஸ்டிஸ் கட்சி மட்டும், எப்போதும் போல் நடந்துகொண்டுதான் இருக்கும், ஏனென்றால் அதன் கொள்கைகள் அப்பேர்க்கொத்தவை; அழிக்க முடியாதவை; உயர்ந்த நோக்கமுள்ளவை! இன்னார் தான் இருக்கவேண்டும்; இவர் இல்லாமல் ஒன்றும் முடியாது என்கிற அவசியம் நமது கட்சிக்கே புறம்பானது. கட்சியிலிருக்கிற ஒவ்வொரு அங்கத்தினரும் கட்சியைத் தலைமை வகித்து நடத்தக்கூடிய விதமாய் சிறப்பான கொள்கைகள் இதற்கு இருந்து வருவதே அதன் காரணம்.

கூடுமான மட்டும் எனது கட்சியின் கொள்கைகளைப் பற்றி உங்கள் முன் பேசிவிட்டேன். இன்னொரு முறை உங்கள் ஊருக்கு வரும் பெருமை எனக்குக் கிடைக்குமானால் அப்போதும் பேசுவேன். முடிவாக உங்களை நான்கேட்டுக்கொள்வது இது; ஜஸ்டிஸ்கட்சியின் கொள்கைகளைக் கேட்டீர்கள். அவை தங்களுக்குப் பிடித்தமாகத் தோன்றினால் எங்கள் கட்சியை ஆதரியுங்கள்! எங்களுக்கு உங்களால் முடிந்தவரை ஒத்தாசை செய்யுங்கள்!

சென்னையில் நீங்கள் தங்குவதற்கு சௌகரியமிகுந்த விடுதி

கலைவள்ளல் S. K. சுந்தரம் அவர்களின்

ஹோட்டல் எவரஸ்ட்

ரயில்வே ஸ்டேஷன், பஸ், டிராம், டாக்ஸி அத்தனையும் அருகருகே! இயற்கையான கடற்காற்றை எல்லா அறைகளிலும் நுகரலாம்

Regd. No. M. 4606. City Herald.

(பேனா நர்த்தனம்)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்புவிக்கவேண்டுமானால், காங்கிரஸ்காரர்களைப் பார்த்துத்தான் சந்தன தாம்பூலத்துடன் அவர்கள் கையில் ஒப்புவிக்கவேண்டும்! ஜர்மனியை நிர்வகிக்கும் விஷயத்திலும் ஜப்பானின் போர்க்குணத்தை ஒடுக்கி மேற்பார்வை பார்க்கும்விஷயத்திலும் நேசதேசத்தார் கஷ்டப்படுவதைப்பார்த்தால் பரிதாபமாயிருக்கிறது. அந்தப் பொறுப்பை இந்திய காங்கிரஸ் தலைவர்களிடம் ஒப்புவித்துவிட்டால் எவ்வளவோ நன்றாயிருக்குமே!

* * *

சென்ற வியாழக்கிழமை சென்னை கோகலே ஹாலில் நடந்த ரயில்வே தொழிலாளர் கூட்டமொன்றில் பேசும்போது ராஜகோபாலாச்சாரி சொன்னார், "இப்பொழுது அதிகாரங்களை ஏற்பதனால் சுகமோ சந்தோஷமோ ஏற்படப் போவதில்லை; துன்பமே அதிகமாயிருக்கும்; அதிக பாபம் செய்தவர்களுக்கு தண்டனை அளிக்க வேண்டுமானால் இந்த நாட்டிற்கு இப்பொழுது அவர்களை மந்திரிகளாக்கி விட்டால் போதும்" என்று. வாஸ்தவந்தானே! யுத்த காலத்தில் தேசத்தை நிர்வாகம் செய்வது சுலபமாம்; யுத்தம்முடிந்தபிறகு-யுத்த பிற்காலத்தில் நிர்வாகம் செய்வது கஷ்டமாம்! ஆச்சாரியாரின் சொல்லில் எவ்வளவு அர்த்த புஷ்டியும் அழகும் அடங்கியிருக்கிறது என்று நீங்களே பார்த்து, யோசித்து நிதானமாகச் சொல்லுங்கள்! பொது ஜனங்களும் விவேகிகள் தான்-அவர்களிலும் தம்மைப் போன்ற புத்திசாலிகள் பலர் இருக்கத்தான் செய்வார்கள்-என்கிற நினைப்பு அவருக்கு எள்ளு மூக்களவாவது இருக்குமானால் ஆச்சாரி அந்தமாதிரி சொல்லுவதற்கான துணிச்சல் உண்டாயிருக்குமா?

* * *

சிம்லா மகாநாட்டுக்கு முன் ராஜகோபாலாச்சாரியே ஓரிடத்தில் சொன்னார், "சென்னை மாகாண சர்க்காரிடம் 14-கோடி ரூபாய் இருக்கிறது; இந்தச் சமயத்தில் காங்கிரஸ்காரர்கள் பதவி ஏற்காவிட்டால் மற்றவர்கள் அதை அவர்கள் இஷ்டப்படி செலவுசெய்துவிடுவார்கள்" என்று. இதிலிருந்தும், கோகலே ஹாலில் அவர் சொன்னதிலிருந்தும் பார்த்தால் யுத்த காலத்தில் 14-கோடி ரூபாய் சேர்த்தது கஷ்டமல்ல; யுத்தபிற்காலத்தில் அதைச் செலவு செய்வதுதான் கஷ்டமென்றாகிறது. ஆச்சாரியாரின் ஆணவத்தைப் பார்த்தீர்களா? பொதுமக்களுக்கு ஞாபகசக்தி சூன்யப்பட்டுப் போயிற்று; முன் நடந்தவைகளை பேசினவைகளை ஜனங்கள் மறந்திருப்பார்கள்; இப்போது சொல்வதைத்தான் நம்புவார்கள் என்கிற எண்ணம் அவருக்கிருந்தாலன்றி முன்னுக்குப் பின் முரணாக அப்படி சென்ற வியாழக்கிழமை சொல்ல முன் வருவாரா?

* * *

பதவி ஏற்க வேண்டுமென்று ஊர் ஊராக, மாகாண மாகாணமாக ராஜகோபாலாச்சாரி காவடி தூக்கியது போய்-பதவி பெறுவதற்காக வைஸ்ராய் எதைக்கொண்டு வந்தாலும் அதை ஏற்கவேண்டுமென்று சீமைக்கு வேவல் போயிருக்கும்போது சொன்னதுபோய்-சிம்லா மகாநாட்டில் லீக் முரண்டிக்கொண்டிருந்தும் காங்கிரஸ் தலைவர் தனது ஜப்தாவைக் கொடுத்ததல்லாமல், 'மகாநாடு முறிந்து விட்டதானாலும் காங்கிரஸ் மனம் மாறிவிடவில்லை; மீண்டும்கூப்பிட்டால் ஓடோடி வருகிறேன்' என்று ஆஸாத் சொன்னது போய்—"ஆளுபவர்கள் இன்று கஷ்டமான காலத்திலிருப்பதால், தேசப் பொறுப்பை கைகழுவி விடும் நிலைமை ஏற்பட்டுவிட்டது; நிர்வாகத்தை தேசத் தலைவர்களிடம் விட்டுப்போக வழி பார்க்கிறார்கள்" என்று சொல்லிக்கொள்ளும்படியான அளவுக்கு வந்துவிட்டார் ஆச்சாரி.

* * *

ஆச்சாரியின் கோகலே ஹால் பிரசங்கத்திலுள்ள மற்றொரு ரசப் பொருளைக் கவனியுங்கள். தவறு செய்வதற்கும் அக்கிரமங்கள் பண்ணுவதற்கும் தங்களுக்கு லைசன்ஸ் இருக்கிறது என்று அவர் சொல்வதைக் கவனிக்கவேண்டும்; "நம்பிக்கை உள்ளவர்கள் தவறுகளைச் செய்து விட்டால் ஜனங்கள் கோபப்படமாட்டார்கள்; அதை கவனிக்கவுமாட்டார்கள்; ஆகையால் தைரியமாக முன் வந்து அதிகாரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியது நம் கடமை" என்று சொல்கிறார் 'சி. ஆர்'. இதிலிருந்து இதற்கு முன் அவர்கள் செய்தது தவறுதான் என்றும் இனியும் அதுபோன்ற தவறுகளைச் செய்தாலும் ஜனங்கள் பொருட்படுத்தக் கூடாது என்றும், அதற்கு உட்பட்டே ஜனங்கள் தங்களுக்கு வோட் கொடுக்கவேண்டுமென்றும் அவர் சொல்லி விட்டதால் பொதுமக்கள் தான் உஷாராகிக் கொள்ளவேண்டும். காங்கிரஸ் அபேக்ஷகர்களுக்கு வோட் கொடுத்துவிட்டு, பிறகு விற்பனைவரி வந்ததே, தொழில்வரி உயர்ந்ததே, பெட்ரோல் வரி உயர்ந்ததே, என்று முன்னர் அங்கலாய்த்தது போல் வருந்துவதில் பிரயோசனமில்லை என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.

* * *

சண்டைக்குச் சென்று திரும்பும் மக்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை நிதானிக்க வேண்டுமல்லவா? கவனியுங்கள் சொல்கிறேன், பீவர்லி நிக்கலாஸ் என்ற வெள்ளைக்காரன், இந்திய சிப்பாய்களைப் பற்றி எழுதும்போது 'கூலிப் படை' 'சோத்துப் பட்டாளம்' என்று முட்டாள் தனமாக எழுதி விட்டதைப்பற்றி நாமெல்லோரும் ஆத்திரப்பட்டோம்! பத்திரிகைகளில் கண்டித்து எழுதினோம். ஆனால் இன்று ராஜகோபாலாச்சாரி அதே மாதிரி நாகூசாமல் சொல்கிறாரே. அவரது நாக்கின் நரம்பை என்ன என்று வர்ணிப்பது? "வெளி நாடுகளில் கட்டாய ராணுவ சேவை இருந்தபோது நம்நாட்டில் நம்மவர்களாகவே ராணுவத்தில் சேர்ந்தனர். சாப்பாட்டுக் கஷ்டத்தைப் போக்கவே அப்படிச் செய்தார்கள்" என்று ராஜகோபாலாச்சாரியே சொல்லிவிட்டார். இப்பேர்க்கொத்த பல பொது ஜன விரோதியைக் கொண்ட கட்சியாரை சண்டையிலிருந்து திரும்பிவரும் வீரர்கள் ஆதரிக்கப் போகிறார்களா? என்பது தெரியவேண்டும் ராணுவத்திலிருந்து கலைக்கப்படும் தோழர்களுக்கெல்லாம் வோட்டு உரிமை இருக்கத்தான் போகிறது. அந்தவோட்டுகளெல்லாம் காங்கிரஸ் அபேக்ஷகர்களுக்கே விழுமானால் அதைக்காட்டிலும் அவமானம் வேறில்லை.

* * *

இந்தியாவுக்குள் யுத்தம் பரவாமலும், ஐரோப்பிய, சீனா பர்மா முதலிய நாடுகளிலுள்ள தாய்மார்கள், குழந்தைகள், கிழவர்கள், பால்யர்கள் சகலரும் வீடிழந்து, சொத்திழந்து சுகமிழந்து, இரவென்றும் பகலென்றும் பாராமல் ஊர்விட்டு ஊர் ஓடி ஓடி உயிர்ப்பிச்சைக்கு அலைமோதித் திரிந்ததுபோல் நம்நாட்டிலும் ஏற்படாமல் தடுத்து' உயிர் கொடுத்து ரக்ஷித்த இந்திய வீரர்களை சோற்றுக்காக பட்டாளத்தில் வலியச் சேர்ந்தவர்கள் என்று சொல்லும் கூட்டத்தை, வரப்போகும் தேர்தலில் அடியோடு ஒழித்துக் கட்ட வேண்டிய பொறுப்பு சண்டையிலிருந்து திரும்பிவரும் வீரர்களைச் சேர்ந்தது. ஒவ்வொரு சிப்பாயும் தங்கள் வோட்டுகளை மட்டு மல்லாமல் அக்கம் பக்கத்தார் ஓட்டுகளையும் ராஜகோபாலாச்சாரியின் கோஷ்டியாகிய காங்கிரஸ் அபேக்ஷகர்களுக்கு கிடைக்காமல் தடுத்து, அவர்களை எதிர்த்து நிற்போருக்கு கிடைக்கும்படி செய்து காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிக்கவேண்டும்.

* * *

அதே கோகலே ஹாலில் ஆச்சாரி சொல்லுகிறார் "1936-ல் நடந்த தேர்தலில் வெற்றியடைந்துவந்த அதேகட்சி(காங்கிரஸ்)தான், அதே ஆள்கள் தான் இப்பொழுதும் வரப்போகிறார்கள்" என்று. அந்த ஆணவமான சொல்லை பொய்ப்பித்து, காங்கிரஸ் அபேக்ஷகரை முறியடிக்க வேண்டியகடமை சண்டைக்குச் சென்று வரும் வீரர்களையும் அவர்களைப்பெற்ற தாய் தந்தையரையும் அவர்களோடு பிறந்த சகோதர சகோதரிகள் உற்றார் உறவினர்களையும், யுத்தத்தில் தங்கள் பிள்ளைகளைப் பலி கொடுத்த பெற்றோரையும் சேர்ந்ததாகும்.

## போக்கு வரத்து போர்டில் ரெத்தினசாமி

சென்னை போக்கு வரத்து போர்டின் (ரோடு டிராபிக் போர்டு) அங்கத்தினராக சேலம் முனிசிபல் சேர்மன் பி. ரெத்தினசாமி பிள்ளை சர்க்காரால் நியமனம் செய்யப் பெற்றிருக்கிறார்.

## திருச்சி ஜட்ஜ்

திருச்சி ஜில்லா ஜட்ஜ் ஜியார் ஜீஸன் செப்டம்பர் 1-ந் தேதி முதல் ஒரு மாத ரஜாவிலும், ரஜா தீர்ந்தபின் வேறு ஊருக்கு மாற்றப்பட்டும் போவதால் சப் ஜட்ஜ் கே. பி. வெங்கடாஜலமய்யர் திருச்சி ஜில்லா ஜட்ஜாக (ஆக்ட்) நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சென்னையிலுள்ள பட்டணம் பொடித் தொழிற்சாலைகளில் மிகப் பெரிது

**என். வி. ஷண்முகம்**

கம்பெனியாரின் ஸ்பெஷல் பட்டணம் பொடி

உத்தமப் பெரியார்கள் போற்றும் உயர்தரப்பொடி. காரம், மணம், குணம், நிறம், வாடை இவ்வைந்தும் ஒருங்கே கமழ்வது. நாசிக்கு நறுமணம், மனதிற்கு உற்சாகம்.

வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் கனவான்களுக்கு சில்லரையாகவும் எல்லா ஊர்களிலும் கிடைக்கும்.

Edited and Published by T. M. Venkatachalam and Printed at "Asoka Press", Teppakulam, Trichinopoly.